Registered as a Newspaper


# உதயன்

சுடர் : 41
கதிர் : 157

சனிக்கிழமை
02 மே 2026

சித்திரை 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50



வடக்கு மாகாணத்தில்

## மோசடியாளர்களுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை பாயும்

அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மே 2

**வடக்கில் உள்ள ஊழல்வாதிகள், மோசடியாளர்கள், ஆக்கிரமிப்பாளர்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்வரும் மாதங்களில் அவர்கள் கணிசமான வழக்குகளையும், விசாரணைகளையும் எதிர்கொள்வார்கள் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.**

»11

## மாலைதீவு ஜனாதிபதி நாளை இலங்கை வருகை

கொழும்பு, மே 2

மாலைதீவு ஜனாதிபதி மொகமட் மொய்சு நாளை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை மாலைதீவுக்கு இடையில் அண்மைய நாள்களாக இருதரப்பு

»11

செம்மணிப் புதைகுழியில்

## 3 என்புத்தொகுதிகள் நேற்று அடையாளம்!

இரண்டு சிறுவர்களுடையவை

யாழ்ப்பாணம், மே 2

செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றையதினம் மூன்று என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு

»11



## இடுப்புக்குக் கீழ் அழிவடைந்த என்புத்தொகுதி அடையாளம்!

சுத்தப்படுத்தும் பணிகள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மே 2

யாழ்ப்பாணம் - செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து இடுப்புக்குக் கீழ் அழிவடைந்த நிலையில் என்புத் தொகுதியொன்று மீட்கப்பட்டுள்ளது

»11

மேதினப் பேரணிகள்

## பேரவையினர் நல்லூரில் திசைகாட்டி யாழ்.நகரில்

யாழ்ப்பாணம், மே 2

மே தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் அரசியற் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் இணைந்து பேரணிகளை முன்னெடுத்தன. திசைகாட்டி அரசாங்கத்தின் பேரணி யாழ்.நகரிலும், தமிழ்த் தேசியப் பேரவையின் பேரணி நல்லூரிலும் இடம் பெற்றன.

»11

## ஆடம்பரமான வாழ்க்கையில் திசைகாட்டி அரசாங்கத்தினர்



ரணில் விக்கிரமசிங்க காட்டம்

கொழும்பு, மே 2

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து திசைகாட்டி அரசாங்கத்தினர் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர் என்று, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விமர்சித்துள்ளார். மேதினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு

»11



சீரணி

## நாகபூஷணி அம்பாளுக்கு தேர்த்திருவிழா பக்திபூர்வம்

யாழ்ப்பாணம், மே 2

வரலாற்றுப் பிரசித்திபெற்ற சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் மிகவும்

»11

## குடும்பத்தலைவரை கடத்தித் தாக்குதல்

சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், மே 2

சீட்டுப்பணம் தொடர்பில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக குடும்பத்தலைவர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு அவர்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்

»11



திறைசேரியில் இடம்பெற்ற

## 2.5 மில்லியன் டொலர் மோசடியை கண்டறிந்த அதிகாரி மர்மச்சாவு

விசாரிப்பதற்கு இரு குழுக்கள்!

கொழும்பு, ஏப். 2

திறைசேரியில் இடம்பெற்ற 2.5 மில்லியன் டொலர் மோசடியைக் கண்டறிந்து வெளிப்படுத்திய அதிகாரியான ரங்க ராஜபக்ச மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு வழங்கப்படவிருந்த 2.5 மில்லியன் டொலர் நிதி, திறைசேரி மீது நடத்தப்பட்ட இணைய ஊடுருவல் மூலம் அண்மையில் அபகரிக்கப்பட்டது. இந்தவிடயத்தைவெளிநாட்டு வளங்கள் திணைக்

»11

## மரத்திலிருந்து விழுந்த முதியவர் துயரச்சாவு!

யாழ்ப்பாணம், மே 2

கறிவேப்பிலை பிடுங்குவதற்காக மரத்திலேறிய முதியவர், தவறி வீழ்ந்து நேற்று உயிரிழந்தார். யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த இராசதுரை பகவான்தாஸ் (வயது-64) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

»11



"மோசடியைக் கண்டுபிடிச்சவைக்கும் மோட்சம் குடுக்கிறதுதான் மாற்றம் கண்டியளோ"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மருந்துகளுக்குத் தட்டுப்பாடு உயிராபத்தில் நோயாளர்கள்!

## மருத்துவத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவிப்பு

**கொழும்பு,மே.2**


**நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் மருந்து விநியோகக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள தடைகள் காரணமாக, பல அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் மருந்து விநியோகக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள தடைகள் காரணமாக, உயிர் காக்கும் அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் பணவீக்கம் காரணமாக, வெளிநாட்டு விநியோகஸ்தர்கள் மருந்துகளை விநியோகிப்பதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலையில் மருந்துகளை இறக்குமதி செய்ய விநியோகஸ்தர்கள் முன்வராத நிலை காணப்படுகிறது. புதிய மருந்து வகைகளைப் பதிவு செய்வதில் நிலவும் இழுபறிகள் தட்டுப்பாட்டை மேலும் அதிகரித்துள்ளன.

இந்த மருந்துத் தட்டுப்பாட்டினால் நோய்களுக்குச் சிகிச்சை பெறுவோர் சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சுகாதார அமைச்சு உடனடியாகத் தலையிட்டு, விநியோகஸ்தர்களுடன் பேச்சு நடத்தி இந்தத் தட்டுப்பாட்டை நீக்கத் தவறினால், நாட்டின் சுகாதார சேவை முழுமையாக முடங்கும் அபாயம் உள்ளது- என்றார். (ச-இ)



## தராக்கி சிவராம் நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,மே.2

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் தராக்கி சிவராமின் 21ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, கொக்குவிலிலுள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி யின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், தராக்கி சிவராமின் உருவப்படத்துக்கு முன்பாகச் சுடரேற்றப்பட்டு, மலர்மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து மலரஞ்சலியும், நினைவுரைகளும் நடைபெற்றன.

(க-66)

## திறைசேரியின் நிதி மாயம்; நிதியமைச்சுக்குக் காலக்கெடு

கொழும்பு.மே.2

மத்திய வங்கியின் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி மாயமான விவகாரம் தொடர்பாக, நிதி அமைச்சு ஒரு மாத காலத்துக்குள் முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும் என அரச நிதி பற்றிய நாடாளுமன்றக்குழு உத்தரவிட்டுள்ளது.

2025 நவம்பர் முதல் ஜனவரி வரையிலான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 10 பரிவர்த்தனைகள் உரிய பெறுநரைச் சென்றடையவில்லை. ஜனவரி மாதமே இதற்கான அறிகுறிகள் தெரிந்திருந்தும், மார்ச் மாதமே அதிகாரிகள் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவ்வளவு நிதி மோசடி குறித்து நாடாளுமன்றத்துக்கோ அல்லது நிதிப் பற்றிய குழுவுக்கோ முன்னதாகத் தெரிவிக்கப்படாமை ஏன் ?

காணாமல் போன இந்த நிதி மீட்கப்படாவிட்டால், அந்த இழப்பை இறுதியில் நாட்டின் வரி செலுத்தும் பொதுமக்களே சுமக்க வேண்டியிருக்கும்.

அதற்கமைய ஆதாரங்களுடன் கூடிய முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிக்க நிதி அமைச்சுக்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலய வருடாந்தத் திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது அடியார்கள் தீச்சட்டி மற்றும் அங்கப்பிரதட்சணை என பல்வேறு நேர்த்திக் கடன்களைச் செலுத்தினர். (க-113)



**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 01.05.2026 | வெள்ளிக்கிழமை | Y | 0 7 1 5 2 9 | 0884 |

**Super Ball**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 01.05.2026 | வெள்ளிக்கிழமை | 3150 | Y | 08 26 44 71 |

**சனிதா**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 01.05.2026 | வெள்ளிக்கிழமை | D | 07 46 64 77 | 5311 |

**SASIRI**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 01.05.2026 | வெள்ளிக்கிழமை | 0980 | 18 29 30 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் | தனுசம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 01.05.2026 | வெள்ளிக்கிழமை | | 02 20 47 52 | 4862 |

**KAPRUKA**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 01.05.2026 | வெள்ளிக்கிழமை | G | 25 | 20 25 46 64 | 2326 |

**அத கோடிபதி**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 01.05.2026 | வெள்ளிக்கிழமை | V | 08 15 17 59 | 2976 |

### சுகாதாரச் சீர்கேடு

## இரு உணவகங்களுக்கு 45,000 ரூபா அபராதம்!



யாழ்ப்பாணம், மே 2

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் பொதுமக்களின் சுகாதாரத்துக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் இயங்கி வந்த இரண்டு உணவகங்களுக்கு, 45 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது. பருத்தித்துறை நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ப. தினேஸ் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட விசேட சோதனையின்போது இந்தக் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

இதுதொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம், உணவக உரிமையாளர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து ஒரு உணவகத்திற்கு 20,000 ரூபா அபராதமும், மற்றொரு உணவகத்துக்கு 25,000 ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தது.

(ச-422,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பப்பைவாய் புற்றுநோயால் வருடாந்தம் 1,400 பெண்கள் பாதிப்பு

கொழும்பு,மே.2

**நாட்டில் வருடாந்தம் சுமார் 1,400 பெண்கள் கர்ப்பப்பை வாய்ப் புற்று நோயால் பாதிக்கப்படுகின்றனர். சுமார் 800 மரணங்கள் பதிவாகின்றன என்று குடும்ப சுகாதாரப் பணியகத்தின் விசேட மருத்துவ நிபுணர் நதீஜா ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 15 வயதுக்கு மேற்பட்ட சுமார் 8 மில்லியன் பெண்கள் இந்தப் புற்றுநோய் பாதிப்புக்குள்ளாகும் அபாயத்தில் உள்ளனர்.

இதற்கு முக்கியமான காரணம் ஹியூமன் பாப்பிலோமா வைரஸ் ஆகும். இது உடலுறவு மூலம் பரவுகிறது. உற்பத்தித்திறன் மிக்க வயதில் இருக்கும் பெண்கள் இதனால் பாதிக்கப்படுவதால், அது நாட்டின் பொருளாதாரத்திலும் குடும்பங்களின் வாழ்வாதாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. குணப்படுத்தக்கூடிய மற்றும் தடுக்கக்கூடிய இந்த நோயிலிருந்து பெண்களைப் பாதுகாக்க பரிசோதனைகளில் பங்கேற்குமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (ச-இ)

## மதுபோதையில் சாரத்தியம்; பெண்கள் நால்வர் கைது!

திருகோணமலை,மே.2

மதுபோதையில் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த நான்கு இளம் பெண்களை அங்குருவாதொட்ட பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் 26, 27, 28 மற்றும் 29 வயதுடைய பெண்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறித்த நான்கு பெண்களையும் பொலிஸார் நிறுத்தி சோதனை செய்தபோது, அவர்கள் அனைவரும் மதுபோதையில் இருந்தது உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். (ச-இ)

## 2.5 மில்லியன் டொலர் திருட்டு நாடாளுமன்றுக்கு அறிக்கை!

கொழும்பு,மே.2

காணாமற்போனதாகக் கூறப்படும் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் விவகாரம் தொடர்பாக, நிதியமைச்சு நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளது.

இந்த அறிக்கை எதிர்வரும் 5ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த விசேட அறிக்கையை நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார். குறித்த பணவிவகாரம் தொடர்பில் நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரிடமும் அரசாங்க நிதி பற்றிய குழுவினால் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ச-இ)



## நன்னடத்தை மையத்தில் சிறுவர்கள் மீது தாக்குதல்

### ஐந்து பேர் கைது

கொழும்பு,மே.2


வெலிமடை பகுதியிலுள்ள சிறுவர் நன்னடத்தை மையமொன்றில் சிறுவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுவர்கள்மீது அங்கிருந்த ஊழியர்கள் தடிகளால் கொடூரமாகத் தாக்கியுள்ளனர்.

இதுதொடர்பில் 119 எனும் அவசர எண்ணுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

## வடக்கில் 34 பாடசாலைகளில் விசேட களப்பரிசோதனைகள்

வடக்கு மாகாணத்தின் 34 பாடசாலைகளில் நேற்றுமுன்தினம் திடீர் களப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. வடக்கு மாகாண ஆளுநரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ், நியமிக்கப்பட்டிருந்த விசேட குழு இந்தப் பரிசோதனைகளை மேற்கொண்டது. வடக்கு மாகாண ஆளுநருக்குத் தொடர்ச்சியாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில், இந்தக் களப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைவாக, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் தலா 6 பாடசாலைகளிலும், மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா 7 பாடசாலைகளிலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 8 பாடசாலைகளிலும் ஒரே நேரத்தில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது உணவு வழங்கல் செயற்பாடுகள், உணவு தயாரிக்கப்படும் முறை, அங்கு பேணப்படும் சுகாதாரத் தரநிலைகள் மற்றும் அதுதொடர்பான உரிய ஆவணப் பேணுகைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் குழுவினர் ஆராய்ந்தனர். கள ஆய்வுகளில் கண்டறியப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய விசேட அவதானிப்பு அறிக்கை, வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்படும் என்று குழுவினர் தெரிவித்தனர். (க-66)



## கறுப்பு நாளாக அறிவித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை,மே.2

திருகோணமலை முத்துநகர் விவசாயிகள், சர்வதேச தொழிலாளர் தினமான நேற்று கறுப்பு ஆடை அணிந்து பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாயக் காணிகளைச் சூறையாடி, தனியார் நிறுவனங்களுக்குச் சூரிய மின்சக்தி உற்பத்திக்காக வழங்கியதைக் கண்டித்து இந்த விழிப்புணர்வுப் போராட்டம் முன்[illegible] பட்டது. "எமது நி[illegible] வேண்டும்", "விவசாயிகளுக்கு நீதி வேண்டும்", "நலிவடைந்த உழவர்களுக்கு நீதியைப் பெற்றுத் தா" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்[illegible] (ச-இ)




## காலியான திண்ணை...!

அன்னை எப்ப போவார், திண்ணை எப்ப காலியாகும்?எண்டு பழைய ஆக்கள் அடிக்கடி சொல்லுவினம். அந்தப்பழமொழியின்ர அர்த்தம் சிலவேளையில நல்ல விசயங்களுக்கும் பொருந்தும். அப்பிடியொரு விசயம் இப்ப நடந்திருக்கு. ' இலங்கை கிரிக்கெட் சபையின்ர தலைவரா இருந்த ஷம்மி சில்வாவை இந்த ஜென்மத்தில பதவி நீக்க ஏலாது' எண்டு ஊரே பேசிக்கொண்டிருந்தது. போன வருசம் ரொஷான் ரணசிங்க அவருக்கு எதிரா தலைமைப்பதவிக்கு மல்லுக்கட்டிப் பார்த்தார், ஆனா' ஐ.சி.சி.யின்ர தடை' எண்ட துருப்புச் சீட்டை வைச்சு ஷம்மி அவரையே பதவியில இருந்து தூக்கி எறிஞ்சிட்டார். ரணில் - சாகல கோஷ்டியோட செல்வாக்கில, ஷம்மி ஒரு 'கைவைக்க முடியாத ஆத்மா' எண்ட பிம்பம் அப்பிடியே எல்லாரிட்டையும் பதிஞ்சு போயிருந்தது. மைத்திரி, கோத்தா, ரணில் எண்டு ஜனாதிபதிமார் மாறினாலும், ஷம்மி மட்டும் குத்துக்கல் மாதிரி எட்டு வருசமா கிரிக்கெட் சபையில அசைக்க முடியாம நிண்டார்.

எங்கட கிரிக்கட் பாதாளத்தை விடக் கீழபோய்க் கொண்டிருக்கேக்க, ரசிகர்கள் எல்லாம் கடுப்பாகி 'ஷம்மி கோ ஹோம்' எண்டு கத்தினாங்கள். ஆனா, இந்த 'கிரிக்கெட்ல அரசியல் தலையீடு கூடாது' எண்ட ஐ.சி.சி. யின்ர மொக்கைக் காரணத்தைச் சொல்லிக்கொண்டு, ஊழல் குற்றச்சாட்டுகள் இருந்தாலும் சாகாவரம் பெற்ற புனிதர் வேசத்தில ஷம்மி தலைவர் பதவியை இறுக்கிக் கட்டிப்பிடிச்சுக்கொண்டு குந்தியிருந்தார். மின்சார சபையின்ரையும், பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின்ரையும் தலைவரை மாத்துற மாதிரி ஷம்மியை அவ்வளவு கெதியில தூக்க முடியாதத்துக்கு காரணம், ஐ..சி.சியின்ர விளக்கமில்லாத ரூல்ஸூம், கிரிக்கெட் சபையின்ர யாப்பும் தான்.

ஆனா இப்ப என்னவெண்டால், அரசாங்கம் முறையா ஐ.சி.சியோட உள்ளுக்கால கதைச்சுப் பேசி, 'பிளான்' பண்ணி ஷம்மிக்கும் அவரின்ர நிறைவேற்றுக் குழுவுக்கும் அழுத்தம் குடுத்து ராஜினாமா செய்ய வைச்சிட்டினம். 'கிரிக்கெட்டைச் சீரமைப்போம்'எண்ட வாக்குறுதியில ஒரு படி திசைக்காட்டிக்காரர் முன்னேறியிருக்கினம். இப்ப எரான் விக்ரமரத்ன தலைமையில ரொஷான் மஹாநாமா, சங்கக்கார, சிதத் வெத்தமுனி எண்டு ஒரு 'தகுதியான'குழு இடைக்கால நிர்வாக சபையா வந்திருக்கு. இதைப் பார்த்த பிறகுதான் இனியாவது இலங்கைக் கிரிக்கெட் கொஞ்சம் மீண்டுவரும் எண்டு ரசிகர்களுக்குக் கொஞ்சம் மூச்சு வந்திருக்கு.


ஆனால் இது ஒரு இடைக்காலச் சந்தோசம் தான். கிரிக்கெட் சபையின்ர அந்தப் பழைய யாப்பை மாத்தாம விட்டினமெண்டால், நாளைக்குத் தேர்தல்ல ஷம்மிக்குப் பதிலா இன்னொரு 'பொம்மை'வந்து குந்தும், இல்லை அவரே கூடத் திரும்பி வரலாம். சிஸ்டத்தை மாத்துறது தான் இஞ்ச இருக்கிற ஆகப்பெரிய சவால்.

ஷம்மி பதவியில இருந்து போயிட்டார் எண்டதுக்காக நாளைக்கே கிரிக்கெட் ஆஹா ஓஹோ எண்டு மாறிடாது. வீரர்களிட்ட வத்திப்போயிருக்கிற அந்த 'கிரிக்கட் உணர்வை'யும், வெற்றிப் பாதையையும் கொண்டு வர்றதுக்கு கொஞ்சக்காலம் எடுக்கும். பசை போல ஒட்டிக்கொண்டு இருந்த பழைய கூட்டத்தை அப்புறப் படுத்தினது ஒரு நல்ல தொடக்கம். இனி வாறவை வெறும் பகட்டுக்கு இல்லாமை, கிரிக்கட்டை உருப்படியா மாத்துவாங்களா எண்டு பொறுத்திருந்து பாப்பம் கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மீட்சியை சிதைக்க நடக்கிறது சதி



## ரில்வின் சில்வா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 2

**நாட்டின் பொருளாதார மீட்சியைத் திசைதிருப்ப முயற்சிக்கும் தரப்பினரின் சதித் திட்டங்களுக்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஊடகங்களில் வெறும் பேச்சுகளைப் பரப்புபவர்கள், உண்மையிலேயே ஆதாரம் இருந்தால் நீதிமன்றத்தை நாடலாம். அதைவிடுத்து போலியான பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டாம். நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்களின் சகாக்களே இன்று வீதிகளில் போராடுகிறார்கள். பத்து அல்லது பதினைந்து பேர் ஒன்றுகூடிப் போராடுவதால் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஊழலுக்கு எதிராகத் தமது அரசாங்கம் முன்னெடுத்து வரும் கடுமையான நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்கப் போவதில்லை - என்றார். (ச-இ)

# மீனவர் மீதான தாக்குதல் கடும் மனித உரிமை மீறல்

## கடற்றொழில் அமைச்சர் கண்டனம்.

யாழ்ப்பாணம், மே 2

இலங்கை மீனவர் இந்தியாவில் கைதுசெய்யப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவம் கடும் மனித உரிமை மீறலாகும். எனவே இத்தகைய சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாத வண்ணம், விரைவான மற்றும் நியாயமான விசாரணைகளை மேற்கொண்டு, குற்றவாளிகள் மீது உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கடற்றொழில், அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்தச் சம்பவம் அண்டை நாடுகளுக்கிடையிலான பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கையையும் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது. குறிப்பாக, பொது மக்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை உறுதிப்படுத்துவது எந்த நாட்டுக்கும் அடிப்படைப் பொறுப்பாகும். இந்திய மீனவர்களின் நடவடிக்கைகள் குறித்து நீண்டகாலமாகவே இலங்கை மீனவர்கள் கவலை வெளியிட்டு வருகின்றனர்.

பல சந்தர்ப்பங்களில் இலங்கை மீனவர்கள் அமைதியான முறையில், இந்திய மீனவர்களை தொப்புள் கொடி உறவுகள் என்ற உணர்வோடு அணுகியுள்ளனர். ஆனால் இந்திய மீனவர்களால், இலங்கை கடல் வளங்கள் சூறையாடப்படுவதுடன், சட்டவிரோதமான மீன்பிடி முறைகளும் தொடர்கின்றன. எனவே இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தி, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டும். அமைதியான பேச்சுவார்த்தைகள் மற்றும் பரஸ்பர புரிதலின் மூலம் இந்த விவகாரம் தீர்க்கப்பட வேண்டும்-என்றார். (சு-26)

# 2.5 மில்லியன் டொலர் மோசடி அரசாங்கம் தப்பிப்பது ஏன்?

## ஹர்ஷ டி சில்வா கேள்வி

கொழும்பு, மே 2

திறைசேரிச் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும அரச நிதிப் பற்றிய குழுவில் முன்னிலையாக மறுத்திருப்பது, நாடாளுமன்ற அதிகாரத்தை சவாலுக்கு உட்படுத்தும் செயல் என அந்தக் குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டின் பொது நிதி மீதான முழு அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உண்டு. எனவே, குழுவின் அழைப்பை ஏற்று முன்னிலையாவது ஒரு விருப்பத்தேர்வு அல்ல, அது அவரது அரசமைப்பு ரீதியான கடமையாகும்.

திறைசேரிச் செயலாளர் பதவியில் இருப்பவருக்கு மிகப் பெரிய பொறுப்பு உள்ளது. அவர் ஏன் தப்பியோடுகிறார்? எதை மறைக்கப் பார்க்கிறார்? அவர் மீது தவறான குற்றச்சாட்டுகள் இருந்தால், அதை நிராகரிக்க இது ஒரு நல்ல வாய்ப்பு அல்லவா?

இவ்வாறான செயற்பாடுகள், சிறந்த ஆளுகை தொடர்பாகச் சர்வதேச நாணயநிதியத்துக்கு இலங்கை வழங்கிய வாக்குறுதிகளை மீறும் செயலாகும்.


2022 பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு, நிதி வெளிப்படைத்தன்மைக்காகவே எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவருக்கு இந்தக் குழுவின் தலைமை வழங்கப்பட்டது. மக்களின் 'முறைமை மாற்ற' எதிர்பார்ப்புக்கு இது ஒரு பின்னடைவு - என்றார். (ச-இ)

# சிறையில் கைதி உயிரிழப்பு சிறைக்காவலர்கள் கைது!

கொழும்பு, மே 2

பொரளை மகசின் சிறைச்சாலையில் கைதி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, மேலும் இரண்டு சிறைக்காவலர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளின் அடிப்படையில், முதற்கட்டமாக சிறைச்சாலை அதிகாரி மற்றும் சிறைச்சாலை கண்காணிப்பாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்து மேலும் இரண்டு சிறைக்காவலர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் 15ஆம் நாள் மாலைத் திருவிழாவான திருமஞ்சத் திருவிழா கடந்த புதன்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. இதன்போது மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட திருமஞ்சத்தில் சீரணி நாகபூசணி அம்பாள் வீதி வலம் வந்தார். (ச-66)



அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் நேரில் சென்று பார்வையிட்டார். அத்துடன் அந்தப் பிரதேச மக்களையும் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தார். (ச-17)

# பெண் பிரதிநிதிகள் பாதுகாப்பை அரசியல் களத்தில் உறுதிசெய்க!

## அமைச்சரிடம் மனு கையளிப்பு

யாழ்ப்பாணம், மே 2

வடக்கு மாகாண குடிசார் அமைப்புகளின் பிரதிநிதிகள், மகளிர் தலைமைத்துவ வலையமைப்பு மற்றும் பெண் அரசியல் தலைவர்கள் ஆகியோர் இணைந்து மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜிடம் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து மனுவொன்றை அண்மையில் கையளித்துள்ளனர். கிறிசலிஸ் அமைப்பின் ஏற்பாட்டில் பிரிட்ஜ் திட்டத்தின் கீழ் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

மனுவில், அரசியலில் பெண்களுக்கு நியாயமான பிரதிநிதித்துவம் மற்றும் ஒதுக்கீட்டு முறையினை நடைமுறைப்படுத்தல், அரசியலில் ஈடுபடும் பெண்களுக்கான பாதுகாப்பினை உறுதி செய்தல் மற்றும் அரசியலில் ஈடுபடும் பெண்கள் மக்களுக்கு சேவை செய்யப் போதுமான பொருளாதார மற்றும் நிர்வாக ஆதரவினை ஏற்படுத்தல் ஆகிய விடயங்களை உள்ளடக்கி கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# மாறிவரும் மேதினம்..!

நேற்றுமே 1. உழைக்கும் வர்க்கமாகிய தொழிலாளர்களைப் போற்றும் நாள். உலக வரலாற்றின் முக்கியமான நிகழ்வுகளில், தொழிலாளர்களின் வெற்றியை நினைவுகூர்ந்து முன்னெடுக்கப்படும் மே தினமும் பிரதானமானது. முதலாளி வர்க்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக உலகத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டதன் மூலம் தமது உரிமைகளை நிலைநாட்டிய நிகழ்வின் சிறப்பாகவே மே தினம் கொண்டாடப்படுகின்றது. அமெரிக்காவில் ஆரம்பித்த இந்தப்புரட்சி, தற்போது ஆபிரிக்க நாடுகள் வரை பரவியுள்ளது. இலங்கையிலும் அதன் தாக்கமும் கனாகனமும் வலுவாகவேஉணரப்படுகின்றது. எனினும், இலங்கையில் தற்போது இடம்பெறும் மே தினக் கொண்டாட்டங்கள் அதன் கண்ணியத்துக்கு உகந்தவையா? என்ற கேள்வி எழுவது அவசியமாகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் மேதின நிகழ்வுகள் தற்போது அதன் தாற்பரியத்தை உணர்ந்து முன்னெடுக்கப்படுவதில்லை. மேதினம் என்பது அரசியல் கட்சிகளின் பலப்பரீட்சைக் களம் என்ற வட்டத்துக்குள் முற்றுமுழுதாக முடங்கிப் போயுள்ளது. இம்முறையும் அத்தகைய செயற்பாடுகளே நடைபெற்றுள்ளன. எதிர்க்கட்சிகள் தமது பலத்தை நிரூபிப்பதற்கும், ஆளுங்கட்சி தனக்கிருக்கும் மக்களாதரவை பறைசாற்றுவதற்கான சந்தர்ப்பமாகவுமே நேற்றைய மேதின நிகழ்வுகளைக் கையாண்டுள்ளன. இவ்வாறான மேதினக் கூட்டங்களால் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படும் வகையில் எதுவும் நிகழ்ந்துவிடப் போவதில்லை.

மலையகத்தில் நேற்று இடம்பெற்ற மேதினப் பேரணியில் ஜனாதிபதி அநுர பங்கேற்றுள்ளார். ஆனால், மலையக மக்களின் கண்ணியத்தை, ஊதிய உயர்வை அவர் மீட்டுக் கொடுத்தாரா? என்ற பரிசீலனை மிகவும் அவசியமானது. தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வை வழங்கியதாக தற்போதைய அரசாங்கம் கூறலாம். ஆனால் உண்மை அதுவல்ல. கணிசமான தோட்டங்களில் ஊதியத்துக்கு ஏற்ப வேலையை அதிகரித்துள்ளனர். இன்னும் சில தோட்டங்களில் இதுவரை வழங்கப்பட்ட ஊதியத்தை வழங்குவதற்கு ஏதுவான முறையில் வேலையைக் குறைத்துள்ளனர். எனில், இது எவ்வாறு ஊதிய உயர்வாக அமையும்?தோட்டத் தொழிலாளர்களின் அபிலாஷைகளைநிவர்த்தி செய்யும் வகையில், அடிப்படை ஊதியம் தொடர்பில் புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்புடன் முற்றுப்பெறக்கூடிய விடயமல்ல இது. இத்தகைய அறிவிப்புகளைக் கேட்டுக் கேட்டு மலையக மக்களின் காதுகள் புளித்துப் போய்விட்டன. சந்திரிகா, மஹிந்த, மைத்திரி, கோத்தாபய, ரணில் என எவரும் விதிவிலக்கு இல் லாத வகையில், மலையக மக்களின் ஊதியம் தொடர்பில் விதம்விதமான அறிவிப்புகள்வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த அறிவிப்பைச் செயற்படுத்தும் கட்டுப்பாட்டை அந்தந்த அரசுகளால் கைக்கொள்ள முடியவில்லை என்பதே துயரம். ஆதலால், இந்த விடயத்தில் 'தான் தனித்துவமானவர்' என்பதை ஜனாதிபதி அநுரநிரூபித்தாக வேண்டும்.

தொழிலாளர்கள் எனப்படும் உழைக்கும் வர்க்கத்தினர் அனைவரும் ஜனநாயக அம்சங்களுடனும் நிம்மதியாகவும் சுபீட்சமாகவும் வாழ்வதற்கு உரித்துடையவர்கள். எனவே, அவர்களை வைத்து அரசியல் ஆதாயம் தேடாமல், தொழிலாளர் வர்க்கத்தினர் கண்ணியத்துடன் வாழ வகைசெய்ய வேண்டியதே அனைவரினதும் பொறுப்பு.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com







## பொய்யாமொழி

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

**பொருள்:** உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தை விட மிகப் பெரிதாகும்.




அரச நிறுவனங்களில்

# நிரந்தர நியமனத்துக்கு சுற்றுநிருபம் வெளியீடு

கொழும்பு,மே.2

அரசாங்க நிறுவனங்களில் நீண்டகாலமாக தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் ஊழியர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கான விசேட சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுநிருபம், நாட்டின் அனைத்து அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிக்கையில்,

இந்தத் தீர்மானத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் சுமார் 9,800 ஊழியர்கள் தமது நிரந்தர நியமனங்களைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர்- என்றார். (ச-இ)



# பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு,மே.2

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 5.4 சதவீதமாக அதிகரித்துள்ளது. தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலானமுதன்மைப்பணவீக்கமானது 2.2 சதவீதமாகபதிவாகியிருந்தது. அதே நேரம் கடந்த மார்ச் மாதத்தில் 0.7 சதவீதமாக பதிவாகியிருந்த உணவு பணவீக்கமானது ஏப்ரல் மாதத்தில் 2.8 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# சுற்றிவளைப்பு; 672 பேர் கைது

கொழும்பு,மே.2

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றி வளைப்பின்போது, 672 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் கைதுசெய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 303 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 235 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிற போக்குவரத்துக் குற்றங்களுக்காக 4,691பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

# ரூபா வீழ்ச்சி

கொழும்பு,மே.2

2026 ஏப்ரல் மாத இறுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 2.9% இனால் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரிமாத இறுதியில் மத்திய கிழக்கில் ஏற்பட்ட மோதல் சூழலைத் தொடர்ந்து, வெளிநாட்டுத் துறையில் ஏற்பட்ட அழுத்தங்கள் ரூபாவின்பெறுமதிவீழ்ச்சியடைவதற்கு முக்கியமான காரணமாக அமைந்ததாகக் குறிப்பிடப்பட் டுள்ளது. (ச-இ)

# ஞானசாரதேரர் மீது குற்றப்பத்திரிகை!

கொழும்பு,மே.2

பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



இஸ்லாமிய மதத்துக்கு அவதூறு விளைவிக்கும் வகையில் கருத்து வெளியிட்டமை தொடர்பில் இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட் டுள்ளது. (ச-இ)


## நாளை

ஞாயிற்றுக்கிழமை- சித்திரை 20

03.05.2026

சுபநேரம் : 08.56 – 10.26
ராகுகாலம் : 04.26 – 05.56


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் நேற்று வெள்ளிக் கிழமை சித்திராப் பௌர்ணமி விரத உற்சவம் பக்திபூர்வ மாக நடைபெற்றது. காலை 9 மணி முதல் சித்திர குப்த நாயனார் புராணபடனம் படிக்கப்பட்டுத் தொடர்ந்து சிறப்புப் பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து நகுலேஸ்வரப் பெருமான் தேவி சமேதரராக அடியவர்கள் புடைசூழ உள் வீதி உலா வந்தார். (ச-66)

# காங்கேசன்துறை நுழைவாயில் வரவேற்பு வளைவு!

## வலி. வடக்கு பிரதேசசபை அனுமதி

**யாழ்ப்பாணம், மே 2**
**வலி. வடக்கில் காங்கேசன்துறை பகுதியில் 'காங்கேசன்துறை வரவேற்கிறது' எனும் வரவேற்பு வளைவை அமைப்பது தொடர்பில் வலி. வடக்கு பிரதேசசபையில் உறுப்பினர் சீத்தா சிவசுப்பிரமணியம் முன்மொழிந்த தீர்மானம் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.**

வலி. வடக்கு பிரதேசசபையின் மாதாந்தஅமர்வுநேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தவிசாளர் சோ. சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது. அதன்போது, சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் முகமாக காங்கேசன்துறைப் பகுதியில் அபிவிருத்தித்திட்டங்கள்முன்னெடுக்கப் பட்டு வரும் நிலையில், காங்கேசன்துறையை பிரதிபலிக்கும் வகையில் காங்கேசன்துறை எல்லையில் "காங்கேசன்துறை வரவேற்கிறது" என வரவேற்பு வளைவினை அமைக்க வேண்டும் எனும் தீர்மானத்தை உறுப்பினர் சீத்தா முன்மொழிந்தார்.

சபையில் அது ஏற்றுக்கொள்ளப் பட்டுத் தீர்மானமாக நிறைவேற்றப் பட்டது.

அதேவேளை வலி. வடக்கு பிரதேச சபை ஆளுகைக்குள் இருந்து ஆரம்பிக்கும் வழுக்கையாறு தொடர்பில் மக்களுக்கு விழிப் பூட்டும் வகையிலும், வழுக்கையாறு செல்லும் பாதைகளில் விழிப் புணர்வுப் பதாகைகளை காட்சிப்படுத்து வது தொடர்பிலும் உறுப்பினர் சீத்தா முன்மொழிந்த தீர்மானமும் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது. (ச-26)



சித்ரா பூரணை விரதத்தை முன்னிட்டு நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் சித்திரை கஞ்சி காய்ச்சலும் திருமுறை பாராயணம் ஓதலும் நேற்றுக் காலை ஆரம்பமாகி நடைபெற்றன. (ச-17)

# யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதிகளில் சோதனை

யாழ்ப்பாணம், மே 2
திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள பல்கலைக்கழக மாணவர் விடுதிகளுக்கு நீண்ட காலமாக உணவு வழங்கி வரும் வெளி நபர்களின் தரம் குறித்து கிடைத்த முறைப்பாடுகளுக் கமைய நேற்றுமுன்தினம் திடீர்ச் சோதனைகள் நடத்தப்பட்டன. திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் மாணவர் விடுதிகளுக்கு விநியோகிக்கப்படும் உணவுகளின் தரம் மற்றும் சுகாதார நிலை குறித்து இதன்போது ஆராய்ந்தனர். சோதனையின் போது உணவு தயாரிப்பு மற்றும் விநியோகத்தில் பல சுகாதாரக் குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டன.

குறைபாடுகள் கண்டறியப்பட்ட நபர்களுக்கு அதிகாரிகளால் கடுமையான எச்சரிக்கை வழங்கப் பட்டதுடன் அடையாளம் காணப் பட்ட சுகாதாரப் பிரச்சினைகளை உடனடியாகச் சரிசெய்யுமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட் டன. இனிவரும் காலங்களில் இவர்களின் செயற்பாடுகள் தொடர்ச்சியாகக் கண்காணிக் கப்படும் என்றும் தெரிவிக்கப்பட் டது. (ச-26)

## கழிவுநீர் முறைகேடாக வெளியேற்றம்; உணவகம்,மருத்துவமனைக்குத் தண்டம்



யாழ்ப்பாணம்,மே.2
கழிவுநீரை முறைகேடாக வெளிச் சுற்றாடலுக்கு அப்புறப்படுத்தியமை மற்றும் சுகாதார நடைமுறைகளை மீறிய குற்றச்சாட்டுகளில் இரு உணவகங்கள் மற்றும் தனியார் மருத்துவமனை ஆகியவற்றுக்கு பருத்தித்துறை நீதிமன்றால் 48 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள் ளது.

புலோலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில், உடல் நலத்தகுதியை உறுதிப்படுத்தும் மருத்துவச் சான்றிதழ் இல்லாமல் உணவைக் கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் பேணாமல் உணவைக் கையாண்டமை உட்பட இரு உணவக உரிமையாளர்களுக்கு எதிராகவும், நுளம்பு பெருகக்கூடியவாறு கழிவு நீரை வெளிச் சுற்றாடலுக்கு அப்புறப்படுத்திய தனியார் மருத்துவமனைக்கு எதிராகவும் புலோலி பொதுச்சுகாதாரப் பரிசோதகரான கந்தசாமி கிருஸ்ணரட்சகனால் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. குறித்த வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது உணவகங்களுக்கு 38 ஆயிரம் ரூபாவும், மருத்துவமனைக்கு 10 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (க-422)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், . தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சி தரும் செய்தி வந்து சேரும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சற்று தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனம் தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர் செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** முக்கியமான முடிவுகளை பிற்பகலுக்கு மேல் மேற்கொள்வது சாதகமாக முடியும். பிற்பகலுக்கு மேல் தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஒத்துழைப்பு தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப் பயணங்களையும், வெளியிடங்களில் சாப்பிடுவதையும் தவிர்ப்பது நல்லது.

**மகரம்:** சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.


**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக் கூடும்.

**மீனம்:** வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 03 . 2007



மறைவு 28 . 04 . 2026

### ரஜினிகாந்த் மிதுஷனன்

வீமன்காமம் தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ரஜினிகாந்த் மிதுஷனன் கடந்த 28.04.2026 செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் ரஜினிகாந்த் கயாமலாவின் பாசமிகு மகனும், சிந்துஜனின் அண்ணாவும், காலஞ்சென்ற வல்லிபுரம் ஜெயராஜா மற்றும் இந்திராதேவி தம்பதியினர், காலஞ்சென்ற வெற்றிவேலு இராசலட்சுமி தம்பதியினர் ஆகியோரின் பேரனும், சாருமதி, சசிகலா வின் பெறாமகனும், சியாமலேஸ்வரன் ரெஜினா (வவியா), பகிரதன் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 9090 132
077 6173 899

(CS 31726)A

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 09 . 1984



இறப்பு 28 . 04 . 2026

### மார்க்கண்டு பரிஷாந்தன்

**(லதாங்கினி வீடியோ உரிமையாளர்)**

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தை பிறப்பிடமாகவும் கூளாவடி ஆணைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பரிஷாந்தன் (லதாங்கினி வீடியோ உரிமையாளர்) அவர்கள் கடந்த (28.04.2026) செவ்வாய்க்கிழமை அன்று காலமானர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.05.2026) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கூளாவடி மேற்கு,**
**ஆணைக்கோட்டை.**

**தகவல்: குடும்பத்தினர்**
**கிருஷாந்தன்**
**077 2136 864**

(CS 31724)A

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
30.03.1952

இறப்பு
24.04.2024

அமரர்

### இலட்சுமிநாதன் புஸ்பராணி (வேவி)

அம்மா, நீங்கள் இல்லாத வீடு இன்னும் வெறுமைதான்
உங்கள் சிரிப்பு ஒலி எம் மனதில் தினமும் ஓசைதான்
காலம் சென்றாலும் நினைவுகள் மங்காதே
கண்ணீரில் கூட உங்கள் முகம் தெளிவாகத் தெரிகிறது

உங்கள் அன்பு நிழல் எம்மை எப்போதும் காக்குது
உங்கள் வார்த்தைகள் இன்னும் வழிகாட்டி ஆக்குது
இரண்டு ஆண்டுகள் ஆனாலும் நீங்கள் அருகில்தான்
எம் இதயத்தில் என்றும் நீங்கள் உயிரோடு தான்

அம்மா, உங்கள் ஆசிகள் எப்போதும் எமக்குத் துணை
உங்களை நினைக்கும் ஒவ்வொரு நொடியும் ஓர் பிரார்த்தனை

*நினைவுகளுடன்*
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**ஆசிரியர் வீதி, சங்கத்தானை,**
**சாவகச்சேரி.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 09 . 1946



மறைவு 30 . 04 . 2026

### திருமதி கமலாதேவி கயிலாயபிள்ளை

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி கயிலாயபிள்ளை அவர்கள் கடந்த 30.04.2026 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் ஆறுமுகம் கயிலாயபிள்ளை (ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர்களான சுப்பிரமணியம் - பவளம் தம்பதியரின் மகளும், அமரர்களான ஆறுமுகம் - பாக்கியம் தம்பதியரின் மருமகளும், அமரர் சாரதாதேவியின் சகோதரியும், தயாளன், அமரர் தேன்மொழி மற்றும் வசந்தன், குமரன், செழியன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், உஷாதேவி, வாமதேவா, தாரணி, றுக்சா ஆகியோரின் மாமியாரும், ராகவப்பிரியன், பானுப்பிரியன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், பிரித்திகா, மனோஜ், அகல்யா, அக்ஷயன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 7.00 மணி முதல் 10 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் பூதவுடல் பூனாவோடை இந்து மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தயாளன் - 074 072 7702**
**அன்பு - 076 006 1364**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**களவத்துறை வீதி,**
**அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஊர்காவற்றுறையில் அதிவெப்பம் மயங்கி விழும் கால்நடைகள்!



யாழ்ப்பாணம், மே 2

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறைப் பகுதியில் நிலவிவரும் கடும் வெப்பம் காரணமாக கால்நடைகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதுடன், பல மாடுகள் மயங்கி விழும் சூழல் ஏற்பட்டுள்ளது.

யாழ். தீவகப் பகுதியான ஊர்காவற்றுறையில் தற்போது நிலவிவரும் அதீத வெப்பம் காரணமாக, கால் நடைகள் பெரும் உயிராபத்தை எதிர்நோக்கியுள்ளன.

கடும் வெப்பத்தைத் தாங்கமுடியாமல் பல இடங்களில் மாடுகள் மயங்கி வீழ்ந்து வரும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

மாடுகள் மயங்கி வீழ்ந்த இடங்களுக்குப் பிரதேச கால்நடை மருத்துவ அதிகாரி உடனடியாகச் சென்று, அவசர சிகிச்சைகளை வழங்கிவருகின்றார். வெப்பத்தின் தாக்கம் காரணமாகப் பால் உற்பத்தி பெருமளவு குறைந்துள்ளதுடன், சினை மாடுகள் குறைப்பிரசவத்தில் ஈடுபடும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

வெப்ப அலைகளிலிருந்து கால்நடைகளைப் பாதுகாக்க முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை கடும் வெயில் படும் வெட்டை வெளிகளில் மாடுகளைக் கட்டி வைப்பதைத் தவிர்க்க வேண்டும். மாடுகளை மரங்கள் சூழ்ந்த நிழலான இடங்களிலோ அல்லது காற்றோட்டமான கொட்டில்களிலோ வைத்திருக்க வேண்டும். மாடுகள் தாகத்தைத் தணித்துக் கொள்ளும் வகையில் எப்போதும் சுத்தமான குடிநீரை அருகில் வைத்திருக்க வேண்டும் என்றும் கால்நடைத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச-214)


## கொழும்பில் உடனடி தொழில் வாய்ப்பு

கொழும்பு பகுதியில் Dish Antenna பிற்றிங் மற்றும் Repair செய்ய் கூடிய நன்கு அனுபவமும், சாரதி அனுமதிப் பத்திரமும் உள்ள கொமிசன் அடிப்படையில் வேலை செய்யக்கூடிய ஒருவர் உடன் தேவை.

- திறமைக்கும், முயற்சிக்கும் ஏற்ப மாதாந்தம் 200,000/- மேல் வருமானம் பெறலாம்.
- மோட்டார் சைக்கிள் மற்றும் உபகரணங்கள் தரப்படும்.
- தேவையாயின் உணவு, தங்குமிடம் ஏற்பாடு செய்து தரப்படும்.
- திறமையும், அனுபவமும் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
T.குமார் 077 771 0785

(CS/61338) J-1


## 9ஆம் ஆண்டு நினைவுகளுடன்...



அமரர் திருமதி
**டொரின் மேரி அருள்வதனன்**

அன்னை மடியில்
03.06.1976

ஆண்டவன் அடியில்
02.05.2017


ஆண்டுகள் ஒன்பது ஆனாலும்
அன்னையின் நினைவுகள் மாறுமா?
ஈரைந்து மாதங்கள் தாங்கிய உம்மை
இவ்வுலகில் மறப்போமா?
அன்பூட்டி. அறிவூட்டி அவனியிலே
வாழ வைத்த உம் அன்பை
வலிகளோடு வாழ்க்கை கடக்க
வாழ்வைத் தந்தவள் எம்மை விட்டுச் சென்றாள்
இவ்வுலகை அன்னை கடந்தாலும்
இதயத்தில் என்றும் வாழ்கிறாள்

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

கணவர் - அ. அருள்வதனன்
பிள்ளைகள்- சபிஷன், றிஷாநாத், நிபோஷன்.

(cs61298) (N-1)

## மரண அறிவித்தல்



தோற்றம்
02 . 09 . 1937

மறைவு
29 . 04 . 2026

**முத்தையா மாசிலாமணி**

(ஓய்வுபெற்ற காணி உத்தியோகத்தர் - கிளிநொச்சி, முல்லைத்தீவு)

தாவடியைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மற்றும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட கலைமாணி, கலாபூஷணம் முத்தையா மாசிலாமணி அவர்கள் 29.04.2026 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தவநிதியின் பாசமிகு கணவரும், ரகுபரன் (அமெரிக்கா), ராகுலன் (கனடா), பானு (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மேனகா, துஷ்யந்தி, துஷ்யந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரகுகிருஷ்ணன், ரகுவர்மன், அர்ச்சனா, விஷாலி மற்றும் சஞ்சேயன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசாமி, சுப்பிரமணியம், சந்திரசேகரன், லீலாவதி, விமலதேவி மற்றும் சரஸ்வதி (சிங்கப்பூர்) ஆகியோரின் சகோரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
071 566 7583

(cs61333) N-1

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த (13.05.2025) அன்று இறைபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**கனகரெட்ணம் லோகானந்தம்**

ஆண்டுகள் ஒன்றாகியது - அப்பா
உங்களைப் பிரிந்து
வையகம் போற்ற வாழ்ந்து
வானுறையும் தெய்வமாக
இயற்கையில் இணைந்து
பழுதில்லாப் புதுமலராய் என்றும்
எம் இதயங்களில் மணம் வீசும்
அன்பு நிறை அப்பாவே
உயர்குணமேவிய திருவுருவாய்
என்றும் எம்மை வழிகாட்டி
நிலவொளியாய் குளிர்மை தந்து
அனுதினம் எமையெல்லாம் மனதாற்றி
அகவொளியாய் நிறைமதியாய்
குறைகளை எடுத்தியம்பி
நல்வழிகாட்டிய உம் கருணையினை
பேறாகப் பெற்றோம் பெருமை கொண்டோம்
நீறாகப் போனாலும் நீங்களே திசைகாட்டி
நித்திய வாழ்வினில் நீங்கா ஒளி விளக்கே
அணையாது நாம் கொண்ட பாசம்
இயற்கையின் அசைவுகளில் - அப்பா
உங்கள் உணர்வுகளை நுகர்ந்து
உங்கள் பாதம் மலர்தூவி நல்லை கந்தன் பாதங்களில்
உங்கள் ஆத்மா சாந்திபெற
வணங்குகின்றோம் அப்பா
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

உரும்பிராய் தெற்கு,


என்றும் உம் நினைவில்
குடும்பத்தினர்.

(cs 61327) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 10 . 1941



மறைவு 01 . 05 . 2026

### செல்லையா தெய்வேந்திரம்

ஆடியபாதம் வீதி, நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது ஞானபாஸ்கரோதய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பூரணம் மில் உரிமையாளர் செல்லையா தெய்வேந்திரம் நேற்று (01.05.2026) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - அன்னலட்சுமி தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற கனகபூரணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம், காந்திமதி மற்றும் சூரியகுமாரி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சரோஜினிதேவி மற்றும் கிருஷ்ணானந்த மூர்த்தியின் மைத்துனரும், கோமதி (அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச செயலகம்), கௌரிகாந்தன் (லண்டன்) ஆகியோரின் அருமை தந்தையும், நவரூபன் (ஆசிரியர் யா/பூம்புகார் அ.த.க.பாடசாலை), விநோதா (லண்டன்), அகிலன், ரஜனி ராஜ்குமார், விஜயகுமார், கஜிகுமார், தர்சினி ஆகியோரின் மாமனாரும், ஹரிவதனன் (பரி யோவான் கல்லூரி மாணவன்), சக்திகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி), ருத்ரகாந்த் (லண்டன்), டிபீகா (லண்டன்), ரித்திகா (லண்டன்) ஆகியோரின் பேரனும், கௌரி, பாமினி, மைதிலி, றாகினி, மதுரா, ஜெனி, மௌலிநாத் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை ஞானபாஸ்கரோதய வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
கோமதி - 0777 742471
காந்தன் - +447423510891

(CS 31729)A

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 12 . 1951



மறைவு 30 . 04 . 2026

(CS/61339) J-1

### வல்லிபுரம் பஞ்சநாதன்
**(Joly Restaurant உரிமையாளர்)**

வளாக வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், 27, பொற்பதி வீதி, கொக்குவிலை லசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பஞ்சநாதன் அவர்கள் கடந்த (30.04.2026) வியாழக்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
27, பொற்பதி வீதி, கொக்குவில்
077 521 4745

## மரண அறிவித்தல்

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்துவிட்டேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" - (2 திமொ-4:7)



பூவுலகில்: 21.01.1933 விண்ணுலகில்: 01.05.2026

### திருமதி இலட்சுமிப்பிள்ளை குமாரவேலு
**(அரியமலர்)**

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் நல்லூர், முத்திரைச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை குமாரவேலு அவர்கள் நேற்று (01.05.2026) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - கற்பகம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குமாரவேலு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகேசு, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானகுமார் (கனடா), தேவகுமார் (ஜேர்மனி), ஆனந்தகுமார் (பிறவுண் வீதி), ஞானரதி (பிரான்ஸ்), மைதிலி (பிரான்ஸ்), பவானி (நல்லூர்), காலஞ்சென்ற செந்தில்குமார், தனஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜோயிஸ் செல்வதேவி (கனடா), புஸ்பராணி (ஜேர்மனி), காலஞ்சென்ற தயாபரி, ஜெயச்செல்வன் (பிரான்ஸ்), குகதாசன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கிறிஸ்தோபர், ரவீந்திரநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரவீணா - வேந்தன், மோசஸ் - வைஸ்ணவி, பிரியந்தி, பிரசாயினி - சானக, செந்தூரன் - திருட்சியா, கௌதமன் - கீதவேணி, அலெக்ஸ் - இசுரிகா, றோய் - ஆரணி, மேர்சி - தினேஸ், ஜனார்த்தனன் - தர்ஷிகா, அர்ச்சனா - துதிசன், காண்டீபன் - பவித்ரா, அனித்தா - அனோஜன், சிந்துஜன் - பிரியா, அனுஜன் - ஷாமியா, அகில்லா, கோபிநாத் - கம்சியா, பிரியங்கா - டிக்சன், ஜொயல் - ஹெலனி, ரேச்சல், சாரா - பெஞ்சமின், ஜொஸ்லின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், எலியா, அகல்யா, ஜேக்கப், தஷ்வந்த் பைரோ, சிசிரா கிரிஷா, இசானா, அமீலியா, ஜெய்தன், வின்யா, தியா, ஆர்யா, ஆலியா மைனா, ஆயன் ராஜா, நிவேதிகா, நிலானிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.05.2026) பிற்பகல் 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக புனித பரி.யாக்கோபு (St.James Church) நல்லூர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

132/1, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
076 3857 045 (ஞானகுமார்)
077 8695 354 (ஆனந்தகுமார்)
077 6219 980 (பவானி)

(CS 31720) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜஸ்தானைத் தோற்கடித்து டெல்லி அணி முன்னேற்றம்!




**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், ராஜஸ்தானை வீழ்த்தி புள்ளிப்பட்டியலில் ஏற்றம் கண்டது டெல்லி.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் அதிரடி வீரர்களான ஜெய்ஸ்வால் 6 ஓட்டங்களுடனும், சூரியவன்ஷி 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். எனினும், அணித்தலைவர் ரியான் பராக், ஜூரல், பெரீரா ஆகியோர் அபாரமாக விளயாடி அணியை நிலைப்படுத்தினார்கள். 20 ஓவர்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றது ராஜஸ்தான். அதிகபட்சமாக ரியான் பராக் 90 ஓட்டங்களைக் குவித்தார். பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி அணிக்கு ஆரம்ப வீரர்களான பதும் நிஷங்க, கே.எல்.ராகுல் இருவரும் நம்பிக்கையான ஆரம்பத்தை வழங்கினார்கள். பதும் நிஷங்க 62 ஓட்டங்களுடனும், ராகுல் 75 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தாலும், நிதீஸ் ராணா, அசுதோஷ் சர்மா இருவரும் மிகச் சிறப்பாக விளையாடி அணியை வெற்றி பெற வைத்தனர்.

(ம)

## கடலுணவு விலை அதிகரிப்பு

**யாழ்., மே 2**

**யாழ்.குடாநாட்டில் கடலுணவுகளின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது. தற்போதைய காலநிலையில் கடலுணவுகளின் பிடிபாடு குறைந்து காணப்படுவதே இதற்குக் காரணமென மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.**

**யாழ்.நகரை அண்டிய குருநகர், கொட்டடி, பாஷையூர், நாவாந்துறை, கல்வியங்காடு போன்ற சந்தைகளுக்கு கடலுணவுகளின் வருகை குறைந்து காணப்படுவதால் அவற்றின் விலையும் எகிறியுள்ளன.**

(ச-17)


## 50ஆவது பிறந்தநாள் நினைவுகள்



**அமரர் சுந்தரலிங்கம் சிவகுமார்**

**எங்கள் குலக்கொழுந்து துளிர்த்தது 01.05.1976**

பெற்றோர் என்னும் பெருமதிப்பைத் தந்தது எங்கள் பொக்கிசம்
பேரன் - பேர்த்தியராய் பதவி உயர்ந்தனர் எம் பெற்றோர்
பீட்டப்பா என்னும் கிடைத்ததற்கரிய பேறு கிடைத்ததாய்
ஓடி வந்து உன்னை வாரியெடுத்து, உச்சிமோந்து,
ஆனந்த கண்ணீரால் அபிசேகித்தார் என் அப்பப்பா!
ஆண் குழந்தைதான் என்றும் சிவகுமார் பெயரென்றும்
முருகப் பெருமான் கூறியதாய் நீ பிறக்குமுன்னே
கூறிவிட்டார் உன் அப்பப்பா.
இவையனைத்தும் படமாய் பதிந்திருக்கிறது என் மனதில்!
இன்று உனக்கு 50வது பிறந்த நாள்

உன் அன்புத் தங்கை, தம்பி, முகந்தெரியாத தம்பிமார்,
மருமக்கள், பெறாமக்கள் எல்லோர் மனதிலும் நீ இருந்தும்
எம் மத்தியில் நீ இல்லை, பாற்கடலில் பள்ளிகொள்ளும்
பரந்தாமன் பாதார விந்தங்களில் அப்பாவும் நீயும்
பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்கள்
எனக் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சிக்கிறோம்.

**அம்மா**
**(குடும்பத்தினர்)**

(CS 309177)



## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 05 . 1954



இறப்பு 01 . 05 . 2026

**திருமதி சிவேஸ்வரி பரமேஸ்வரன்**

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவேஸ்வரி பரமேஸ்வரன் அவர்கள் நேற்று (01.05.2026) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிஜயா செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிஜயா பரமேஸ்வரன் (முன்னாள் ஆசிரியர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் பாசமிகு மனைவியும், ஜெயந்தன், திசாந்தி (அவுஸ்திரேலியா), கஜராம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சர்மினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பூநகரி), துசாந்தன் (அவுஸ்திரேலியா), மகிழினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், அக்ஷயன், வைஷ்ணவி, அஷ்வினி, சுரபி, ஆரபி, காவிரி, காவிழி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தெய்வேந்திரம், இராசேந்திரம், காலஞ்சென்ற யோகேந்திரம் மற்றும் இராஜேஸ்வரி, அனுசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரன், கமலேஸ்வரி, நகுலேஸ்வரன், ரவீந்திரன் மற்றும் கமலாகரன், றஜனி, மனோகரன், பாஸ்கரன், செல்வராணி, ஜெகதீஸ்வரி, பாலச்சந்திரன், உருத்திரானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.05.2026 திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இணுவில் மேற்கு,**
**இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 60394) A



ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 07 . 1961



மறைவு 01 . 05 . 2026

**இராசதுரை பகவான்தாஸ் (பகவான் பத்தர்)**

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை பகவான்தாஸ் (பகவான் பத்தர்) நேற்று (01.05.2026) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - இரத்தினபூபதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பாலகிருஸ்ணன் - சரோஜினிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், லசிந்தா அவர்களின் அன்புக் கணவரும், அபிஷா, சரலாஜினி, தஸ்வின் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சந்திரயோதி, ஞானயோதி மற்றும் மோகன்தாஸ், ஜெகதாஸ், இன்பயோதி, கண்ணதாஸ், பிறேமதாஸ், சுபயோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஜனந்தன் மற்றும் சசிந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 180 4960**
**076 857 2170**

(CS 31728) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோசடி...

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மேதினப் பேரணி யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்று இடம்பெற்றது. இந்தப் பேரணியில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒரு போதும் தனது நோக்கத்தில் இருந்து தவறாது. ஜனாதிபதி அநுர மேற்கொண்ட நடவடிக்கையால் இன்று இலங்கைக் கிரிக்கெட் சபை தூய்மைப்படுத்தப்பட்டுள்ளது. ராஜபக்சாக்களின் மிக நெருங்கிய சகாவான சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார். ஊழல் மோசடிக்கு எதிராக ரணில் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதையெல்லாம் எவரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நாங்கள் செய்தோம். ஊழல்வாதிகளையும், மோசடியாளர்களையும் தண்டித்தோம்.

ஊழலுக்கு எதிராக நடவடிக்கைகள் தெற்கில் இடம்பெறுவதைப்போன்று வடக்கில் ஏன் இடம்பெறுவதில்லை? என்று எம்மிடம் பலர் கேள்வி எழுப்பியுள்ளனர். அவர்களின் கேள்வி நியாயமானது. கவலைப்பட வேண்டாம். தெற்கில் எத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டதோ அவ்வாறே, வடக்கிலுள்ள ஊழல்வாதிகள், மோசடியாளர்கள், ஆக்கிரமிப்பாளர்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்வரும் மாதங்களில் அவர்கள் கணிசமான வழக்குகளையும், விசாரணைகளையும் எதிர்கொள்வார்கள்.

வடமாகாணத்தில் பல பிரச்சினைகள் உள்ளன என்பதை நாங்கள் ஏற்கின்றோம். அவற்றை நாங்கள் சடுதியாகத் தீர்த்துவைக்க முற்பட்டால், வங்குரோத்து அடைந்துள்ள அரசியல்வாதிகள் மேலெழும்ப எத்தனிப்பார்கள். எனவே, நிதானமான முறையிலேயே இந்தப் பிரச்சினைகளை அணுக வேண்டும். மோசடியாளர்களும், சமூக விரோதிகளும் சிறைக்குச் செல்லும் காலமாக அடுத்த இரண்டு வருடங்கள் அமையும். எனவே நம்பிக்கையுடன் இருக்குமாறு மக்களைக் கோருகின்றோம் - என்றார். (அ-ம-26)

## ஆடம்பரமான...

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

ஊழல்களையும், மோசடிகளையும் இல்லாது செய்வதாகக்கூறியே தற்போதைய அரசாங்கத்தினர் ஆட்சிக்கு வந்தனர். ஆனால், அவர்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து ஆடம்பரமான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்.

நிலக்கரி இறக்குமதியில் இடம்பெற்ற ஊழல்கள், திறைசேரியில் இடம்பெற்ற 2.5 மில்லியன் டொலர் மோசடி என்பன நாட்டைப் பெரும் பின்னடைவுக்குள் தள்ளியுள்ளன. அத்துடன், தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியில் நாடாளுமன்ற ஜனநாயகத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகளின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. தோல்வி பயத்தாலேயே மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. 1977ஆம் ஆண்டு முதல் ஜே.ஆர்.ஜெயவர்தன, ரணசிங்க பிரேமதாஸ ஆகியோரால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் தற்போது முடங்கியுள்ளன - என்றார். (அ-ம)

## பேரவையினர்...

திசைகாட்டி அரசாங்கத்தின் பேரணி முலவை சந்தியில் ஆரம்பமாகி, யாழ்ப்பாணம் புதிய பேருந்துத் தரிப்பிடம் வரை இடம்பெற்றது. அமைச்சர் சந்திரசேகர் இந்தப் பேரணிக்குத் தலைமை தாங்கினார். ஆயிரக் கணக்கான மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

தமிழ்த்தேசியப் பேரவையின் பேரணி நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலுக்கு முன்பாக ஆரம்பமாகி நல்லூர் இளங்கலைஞர் மண்டபம் வரை முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்து நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

தமிழர் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்பட வேண்டும், சமஷ்டி முறையில் தமிழர்களுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பேரவையின் பொதுக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தமிழ்த்தேசியப் பேரவையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான ந.ஸ்ரீகாந்தா, தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொ.ஐங்கரநேசன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், ஜனநாயகத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த க.நாவலன், சமூகச் செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம், தமிழ்த்தேசியப் பேரவையின் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-ம-66)

## நாகபூஷணி...

பக்திபூர்வமாக நடைபெற்றது. இதன்போது அடியவர்கள் புடைசூழ முத்தேர்களின் பவனி இடம்பெற்றதுடன் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (அ-ம-66)

## குடும்பத்...

எது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

உடுவில் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் சீட்டுப்பிடிக்கும் தொழிலைச் செய்துவருகின்றார். ஆலடி பகுதியைச் சேர்ந்த ஆணொருவர் அவரிடம் சீட்டுக்கட்டி வந்த நிலையில், குறித்த நபருக்குச் சீட்டு விழுந்துள்ளது. இருப்பினும் உரிய பணத்தைக் கொடுக்காமல் அந்தப் பெண் இழுத்தடித்து வந்தார் எனத் தெரியவருகின்றது. இதையடுத்தே, அந்தப் பெண்ணை மிரட்டுவதற்காக அவரின் கணவரைக் கடத்திச்சென்று ஆடைகளைக் களைந்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இன்னொரு சந்தேகநபர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர் தேடப்பட்டு வருகின்றார். (அ-ம-26)

## மரத்திலிருந்து...

கறிவேப்பிலை மரத்திலிருந்து தவறி வீழ்ந்து மயக்கமடைந்த அவரை, சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசென்ற நிலையில், அவர் முன்னரே உயிரிழந்துவிட்டார் என்பதை மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## 2.5 மில்லியன்...

களத்தின் பணிப்பாளராகப் பணியாற்றிய ரங்க ராஜபக்ச என்ற அதிகாரியே முதன்முதலில் கண்டறிந்து வெளிப்படுத்தினார். இவ்வாறான நிலையிலேயே நேற்றுமுன்தினம் அவர் அவருடைய வீட்டுக்குப் பின்புறமாகச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அரச நிதி அமைப்பில் உள்ள பாதுகாப்பு ஓட்டைகள் மற்றும் நிதி கையாடல் செய்யப்பட்ட விதம் குறித்த இரகசியத் தகவல்களை ரங்க ராஜபக்ச கொண்டிருந்தார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறியுள்ளன. எனினும், விசாரணை வளையத்திற்குள் இருந்த திணைக்களத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவர் அண்மையில் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையில் அவர் மர்மமான முறையில் உயிரிழந்தமை கொழும்பு அரசியலிலும், நிதித்துறையிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இறப்புக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில், உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ரங்க ராஜபக்சவின் இறப்புத் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக இரண்டு பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## இடுப்புக்குக்...

என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் அகழ்வுப் பணிகளைக் கண்காணிக்கும் சட்டத்தரணி நிறஞ்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணிப் புதைகுழியில் இருந்து இடுப்புக்குக் கீழ் அழிவடைந்த நிலையில் என்புத் தொகுதியொன்று மீட்கப்பட்டுள்ளது. 235ஆவது இலக்கமிடப்பட்ட என்புத் தொகுதியே இவ்வாறு அழிவடைந்த நிலையில் உள்ளது. எனினும், அடுத்தகட்டத் தூய்மைப் பணிகளின் பின்னரே இதர விடயங்களை வெளிப்படுத்த முடியுமாக இருக்கும் - என்றார். (அ-ம-26)

## 3 என்புத்...

என்புத் தொகுதிகள் சிறுவர்களுடையவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணிப் புதைகுழி மீதான மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் ஐந்தாம்நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே மேலும் மூன்று என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்த மூன்று என்புத் தொகுதிகளில் இரண்டு என்புத்தொகுதிகள் சிறுவர்களுடையவை என்று முதற்கட்ட அவதானிப்பின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 244 என்புத் தொகுதிகள் அவதானிக்கப்பட்ட நிலையில், அவற்றில் 240 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. எஞ்சியவற்றை மீட்கும் நடவடிக்கை இன்று தொடரவுள்ளது.

பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். நீதவான் எஸ்.லெனின்குமார் மற்றும் நீதிபதி உசைன் ஆகியோர் அகழ்வுப் பணிகளைக் கண்காணித்து வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி நிறஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர் ஆகியோர் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## மாலைதீவு...

உறவுகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாகவே மாலைதீவு ஜனாதிபதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இந்தப் பயணம் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்தும் முக்கியமான நிகழ்வாகக் கருதப்படுகிறது.

மாலைதீவு ஜனாதிபதி மொகமட் மொய்சுவின் இலங்கைப் பயணத்தின்போது, கடல்சார் பாதுகாப்பு, வர்த்தகம், கடலுணவு உற்பத்தி, சுகாதாரம், இளைஞர் வலுவூட்டல், சுற்றுலா மற்றும் ஆவணப் பரிமாற்றம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிக விலைக்கு குடிதண்ணீர் போத்தல்
# 5 இலட்சம் ரூபா தண்டம்

கொழும்பு,மே.2
அம்பேவளை, பட்டிப்பொல பகுதியில் அமைந்துள்ள பிரபல நிறுவனமொன்று, கட்டுப்பாட்டு விலையை மீறி குடிதண்ணீர்ப் போத்தல்களை அதிக விலைக்கு விற்பனை செய்தமைக்காக நுவரெலியா நீதவான் நீதிமன்றம் 500,000 ரூபா அபராதம் விதித்துள்ளது.
வர்த்தமானி அறிவித்தலின் படி, 500 மில்லிலீற்றர் குடிதண்ணீர்ப் போத்தலின் அதிகபட்ச சில்லறை விலை 70 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த நிறுவனம் அதனை 100 ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளமை தெரிய வந்துள்ளது. நீதிமன்றத்தில் குறித்த நிறுவனம் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிமன்றம் 500,000 ரூபா அபராதம் விதித்துள்ளது. (ச-இ)

# 30 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதி



யாழ்ப்பாணம்,மே.2
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின், அற்றார் அழி பசி தீர்த்தல் திட்டத்தின் ஊடாக, வேலணையில் தெரிவுசெய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு, ஒரு வாரகாலத்துக்குத் தேவையான அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன. தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் பயனாளிகளுக்குப் பொதிகளை நேற்றுமுன்தினம் வழங்கினார். இதற்கான நிதி அனுசரணையை பொன்னையா பரமேஸ்வரன் நினைவாக அவரது குடும்பத்தினர் வழங்கியுள்ளனர். (க)

# அதிக கட்டணம் வசூலித்த நடத்துநருக்குத் தண்டம்!



முல்லைத்தீவு, மே 2
பொதுமக்களிடம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விடக் கூடுதல் பணம் வசூலித்த தனியார் பேருந்து நடத்துநருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சு. விமலேஸ் வரன் தெரிவித்துள்ளார்.
நெடுங்கேணி வவுனியா மார்க்கத்தில் பயணிக்கும் சில தனியார் பேருந்துகள் தொடர்பாகப் பொதுமக்கள் அண்மையில் பல்வேறு முறைப்பாடுகளை முன்வைத்திருந்தனர். முறைப்பாட்டைத் தொடர்ந்து, அதிகார சபையினர் உடனடி விசாரணைகளை முன்னெடுத்த போது சம்பந்தப்பட்ட பேருந்து நடத்துநர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.
அதற்கமைய அவருக்கு உடனடியாகத் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. இனிவரும் காலங்களில் இவ்வாறான முறைகேடுகள் நடந்தால் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டது. (ச-27)



குப்பிழான் தெற்கு வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. (க-66)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணத்தில் இருந்து 6.9km தூரத்தில் அமைந்துள்ள கோப்பாயில் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
076 615 3040



# 25 விவசாயிகளுக்கு நிலக்கடலை விதை

மன்னார்,மே.2
டித்வா புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கு உதவி வழங்கும் நோக்கில், மெசிடோ நிறுவனத்தால், தேர்ந்தெடுக்கப்பட்ட 25 விவசாயிகளுக்கு நிலக்கடலை விதைகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. மன்னார் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனையின் பயிற்சி மண்டபத்தில், மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிறாடோ தலைமையில் விதைகள் வழங்கப்பட்டன. (க-56)



# யாழ்ப்பாணம் வந்தடைந்தது சின்மயா அமிர்த யாத்திரை

யாழ்ப்பாணம்,மே.2
சின்மயா மிஷனின் 75 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, முன்னெடுக்கப்பட்ட சின்மயா அமிர்த யாத்திரை, யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளது.
சின்மயா மிஷனினின் இளைஞர் அமைப்பான யோகேந்திராவால், குறித்த யாத்திரை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் டிசெம்பரில் ஆரம்பிக்கப்பட்ட யாத்திரை 35 ஆயிரம் கிலோமீற்றர் கடந்து, நேபாளம், இலங்கை நாடுகள் ஊடாக எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் புதுடில்லியைச் சென்றடையும். பத்து இலட்சம் இளைஞர்களைச் சந்தித்து அந்த இளைஞர்களிடம் உள்ள திறமையை ஊக்குவித்து, சிறந்த வாழ்க்கை வாழ்வதற்காக, இந்த அமிர்த யாத்திரை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-20)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி சந்தியில் பிரதான வீதியில் 24 நிலபரப்புக் காணி விற்பனைக்கு உண்டு
- யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான காப்பற் வீதி முகப்புடன் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் ஒரு பரப்பு 1,200,000/= (பன்னிரெண்டு) இலட்சம்
- 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், ஒன்றரை பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- நடுப்பகுதி ஒரு பரப்பு எட்டு இலட்சம் ரூபாய், பின் பின் பகுதி ஒரு பரப்பின் விலை ஆறு இலட்சம் ரூபாய்.
- யாழ் நகரிலிருந்து 4 km தூரம்
- வீடுகள் அமைப்பதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் சிறந்த இடம்.

தொடர்பு:- 076 99 03 039
076 98 78 617

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல் : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.